**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI**

**OS 148-2020**

**PW-1**

**பெயர் :** தமிழ்செல்வி

**க/பெ :** கார்த்திகேயன்

**தேதி :** 17.10.2023

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது வழக்குரையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் வீட்டு மனை எண் 12ஐ கிரையம் பெற்றுள்ளேன். எனது வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் 11 நம்பர் சைட்க்கு தெற்கு என்று செக்குபந்தி குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். செக்குபந்தியில் 25 அடி அகல தென்வடல் லே அவுட் ரோட்டிற்கும் மேற்கு என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

2. பிரதிவாதி வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் சைட் நம்பர் 11ஐ கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி அவருடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படுவது நாங்கள் பெற்றுள்ள சைட்டுகளின் லே அவும் பிளான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைபடங்களில் உள்ள வீடுகள் எனது மற்றும் பிரதிவாதியின் வீடுகள் என்றால் சரிதான். **(அந்த புகைப்படங்கள்-4 எண்ணிக்கை- பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. மேறப்டி புகைபடங்களில் எனது வீட்டிற்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடி, கொடிகள் என்னால் பராமரிக்கப்படுவது என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து கார் கீழே இறங்கி வருவதற்கு சாய்வு தளம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் தடத்திற்கும் வடபுறத்தில் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்னால் உள்ள 25 அடி அகல தடம் கடந்த 03.09.2010ம் தேதியில் பஞ்சாயத்துக்கு ஒப்படைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது வீட்டை பொறுத்தவரையில்

பிரதிவாதி எந்த இடையூறும் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 13.07.2018ம் தேதியில் பிரதிவாதி எனக்கு இடையூறு செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட பூமியில் முறையான அனுமதிப்பெற்று கட்டிடம் கட்டியுள்ளார் என்றாலும் அதில் இடையூறு செய்வதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் கட்டிடம் கட்டும்போது அனுமதியில்லாமல் கட்டிவிட்டார்கள். நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் நான் தான் 25 அடி அகல தென்வடல் சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னால் ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்றகோரி தான் பிரதிவாதி எதிர் கோர் உரிமை செய்துள்ளார் என்றால் அவ்வாறு நான் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. ஏற்கனவே பிரதிவாதி புகார் கொடுத்ததின் பேரில் பஞ்சாயத்தார் வந்து எனது இடத்தை பார்வையிட்டு நான் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று கூறிவிட்டார்கள். எழுத்துமூலமான அறிக்கை ஏதேனும் கொடுத்தார்களா என்றால் இல்லை. உண்மையில் குன்னத்தூர் பஞ்சாயத்தில் யாரும் வந்து பார்க்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. சைட் நம்பர் 11ல்தான் பிரதிவாதி வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். நான் தற்போதும் தாவா சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன். நான் பிரதிவாதி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு அவர் கோரும் பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

2ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2023.10.17 21:39:57 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.